**தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் - 2023**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகக்ளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் கீழ் 50 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களை சரியாக தொகுதிகளாக்காமல் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,532,897 ஆன சொத்துக்கள் | ஏனைய சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்ட நிலையான சொத்துத் தொகுதிகளில் உள்ளடக்கப்படாத சொத்துக்களே | இலங்கை பொதுத்துறை கண்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ஏனைய சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. | காண்பிக்கப்பட்டதுடன் 2024 இன் நிதிக்கூற்றுக்களில் இதனை மீண்டும் வகைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பல்நோக்கு கேட்போர்கூட கட்டித்தொகுதிக்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 60,498,450 பெறுமதியான உபகரணங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டதுடன் அதற்கான பெறுமானத் தேய்வு சீராக்கங்களை மேற்கொள்வதற்கு பெறுமாகத் தேய்வு கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்க வில்லை. | பல்நோக்கு கேட்போர் கூடத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தேவையான உபகரணங்களின் ஒரு பகுதி ரூபா 60.5 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த உபகரணங்கள் தற்போது பயன்படுத்துவதற்கு முடியுமாகக் காணப்படவில்லை. | பதில் ஏற்றுக்கொள்ள முடியாததுடன் இந்த உபகரணங்களை பயன்படுத்துவதாக உறுதிப்படுத்தப்பட்ட மையால் கணக்கீட்டு வழுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கற்பசைன் சொத்துக்கள் (மென்பொருள்) இற்குரிய காலக்கழிவாக ரூபா 1,327,606 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பெறுமானத் தேய்வுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் கற்பணைச் சொத்துக்களின் குறிப்பில் பெறுமானத் தேய்வு சதவீதம் உள்ளடக்கப்படாதிருந்த துடன் 2024 இன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உரித்தான சகல கொள்கைகளும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 60,583,178 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 57,072,162 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 3,511,013 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயல்பாட்டு செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தை நடாத்திச் செல்லப்படுகின்ற பரீட்சைகளின் பெறுபேறுகள் 03 மாதங்களுக்குள் பரீட்சைகள் பிரிவிற்கு கையளிக்கப்படுவதாகவும் மற்றும் பரீட்சைப் பிரிவுக்கு பெறுபேறுகள் கிடைத்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் பெறுபேறுகள் விநியோகிக்கப்படுவதாகவும் 2022 திசெம்பர் 29 ஆந் திகதிய பணிப்பாளர் சபைக்கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2022/2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற 09 பரீட்சைகளின் பெறுபேறுகளை விநியோகிப்பதற்கு 06 மாதகாலம் எடுத்திருந்தது. | சில வெளிவாரி விரிவுரையாளர்களால் புள்ளிகள் கையளித்தல் தாமதமடைந்தமை மற்றும் உள்ளகப் பதவியணியினரின் பற்றாக்குறை காரணமாக பரீட்சைப் பெறுபேறுகள் விநியோகித்தலில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | குறித்துரைத்த காலங்களில் பெறுபேறுகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தால் நடாத்திச் செல்லப்படுகின்ற பொறியியல் பட்டப்பாடநெறிக்காக தரச்சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு 2010 மே 18 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் எதிர்பார்த்த மட்டத்தில் பட்டப்பாடநெறிகளின் தரச்சான்றிதழை இடுவதற்கு முடியாமையின் காரணமாக தரப்படுத்தலை பெற்றுக்கொள்ள முடியாமலிருந்தது. | இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தால் 2022 ஆம் ஆண்டின் நடுஅரைபகுதியில் புதிய தர கைநூல் விநியோகித்தலின் காரணமாகவும் மற்றும் அந்த கைநூலுக்குரிய ஆகக்குறைந்த ஒரு கல்வி நிறுவனத்தில் கடமையில் ஈடுபட வேண்டியிருந்த ஆகக்குறைந்த நிரந்தர பதவியணியினரின் எண்ணிக்கை 08 ஆக காண்பிக்கப்பட்ட போதும் அந்தத் தேவை இந்தப் பல்கலைக்கழகத்தால் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக தரப்படுத்தல் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு மீண்டும் அது தொடர்பாக இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் உத்தியோகத்தருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகின்றது. | பட்டப்பாடநெறிகளுக்கான தரப்படுத்தலுக்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 சனவரி 03 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 927.34 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்காக வேலைத்தளம் ஒன்று, 600 மாணவர்களுக்காக விடுதி மற்றும் 300 ஆசனங்களை உடைய சிற்றுண்டிச்சாலை என்பவற்றை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 281.36 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 22.5 மில்லியன் மாத்திரம் ஆலோசனை கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. உயர் முகாமைத்துவத்தில் உரிய காலத்தில் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டினட இறுதி வரையில் அந்த செலவின மதிப்பீடு ரூபா 3,046.8 மில்லியன் அதாவது 300 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | அமைச்சின் மூலம் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்ட 2022 மே 04 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் உரிய செயற்திட்டத்தை தற்காலிகமாக கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மீண்டும் ஒருதடவை 2024 இன் நிதியாண்டிற்காக நிதியேற்பாடுகள் திறைசேரியிலிருந்து கோரப்பட்ட போது தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தால் கட்டட நிர்மாணங்களுக்காக நிதியேற்பாடு ஒதுக்காதிருப்பதற்கு அரசாங்கம் தீர்மாணித்திருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டிடம் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து தேவையான நிதி வசதிகளைப் பெற்று நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பல்நோக்கு கேட்போர்கூட கட்டிடத்தொகுதி மற்றும் விரிவுரை மண்டப கட்டிட தொகுதியுடன் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2011 ஏப்ரல் 27 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 434.4 மில்லியன் திறைசேரியிலிருந்தும், அது | இந்த கட்டிடத்தில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் கேட்போர்கூடத்திற்கு உரித்தான வழிப்பதனாக்கியின் முறைமையில் உள்ள குறைபாடுகள் அநேகமான வகையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் வழிப்பதனாக்கி முறைமை முறையான விதத்தில் இந்தப் | வரவு செலவுத் திட்ட நிதியேற்பாட்டை பெற்று தாமதமின்றி செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

துறைசார் நிபுணத்துவ திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலமும் ஒதுக்கப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 304.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் அந்தக் கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பல்கலைக்கழகத்திற்கு கையளித்த பின்னர் உரிய நிறுவனத்துடன் சேவை மற்றும் பராமரிப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.